# தொலைக்காட்சி ....

*(19ம் பக்கத் தொடர்ச்சி)*

*விக்கல்:* இன்னும் நான் வெளியில் செல்ல வில்லை அதனால் எனக்கு தெரியவில்லை நித்திரையால் எழுந்த உடன் உங்கள் நிகழ்ச்சியில் இணைகிறேன்.

*அறுவையாளர்:* (கொஞ்சம் குசியாகி விட்டார்) அப்படியா எமது நிகழ்ச்சிகளை தவறாது பார்ப்பீர்களா..??

*விக்கல்:* நேரம் கிடைக்கும் போதெல்லாம் தவறாது பார்ப்பேன்.

(இன்னும் பாடல் தயாராகவில்லை இப்பொழுது அறுவையாளர் உரையாடல் எண் 2 ஐ ஆரம்பிக்கிறார். அப்படியும் பாடலைத் தேடி எடுக்க முடியவில்லை)

*அறுவையாளர் :* தொழிநுட்பக் காரணங் களால் உடனடியாக உங்களுடைய பாடலைத் தர முடியவில்லை. அதற்காக நாங்கள் ஒரு நல்ல குத்துப் பாடலொன்று தருகிறேன். நீங்களும் வீட்டில் உள்ளவர்களும் நன்றாகக் குத்தாட்டம் போட்டு மகிழுங்கள்.

பாடல் ஒளிபரப்பாகிறது. பாடல் முடிய விளம்பர இடைவேளை. அதனைத் தொடர்ந்து 3வது நேயரை சந்திக்க செல்கிறார்.)

*அறுவையாளர்:*அறுவையோடு இணைப்பில் வந்திருக்கும் நேயருக்கு வணக்கம்.

*நேயர்:* வணக்கம் நான் மணமகன் பாரிஸில் இருந்து பேசுகிறேன்.

*அறுவையாளர்:* வணக்கம் மணமகன் (அறுவையாளர் உரையாடல் எண் 1 ஆரம்பிக்கிறார் அது முடிந்ததும் என்ன பாடல் என்று கேட்கிறார்)

*மணமகன்:* வேதம் திரைப்படத்தில் இருந்து கொஞ்சிக்கொஞ்சி பேசிவரும் அலைபோல என்ற பாட்டை கேட்க விரும்புகிறேன்.

*அறுவையாளர்:* ம் நல்லதொரு பாடலை தெரிவு செய்திருக்கிறீர்கள் இந்த பாடலை விரும்பிக்கேட்பதற்கான காரணம் என்ன மணமகன்.

*மணமகன்:* நாளைக்கு எனக்கு திருமணம் அது தான் கேட்க ஆசைப்பட்டேன்.

*அறுவையாளர்:* அப்படியா உங்கள் திருமணத்திற்கு எங்கள் வாழ்த்துக்கள். எங்களை எல்லாம் அழைக்க மாட்டீர்களா??

*மணமகன்:* குழைகிறார்

*அறுவையாளர்:* சரி உங்கள் வருங்கால துணைவி நிகழ்ச்சியை கேட்டுக்கொண்டிரு க்கிறாரா..

*மணமகன்:* ஆமாம் அவரும் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

அறுவையாளர்: அவருக்கும் இந்தப்பாடல் பிடிக்குமா..??

*மணமகன்:* ஆமாம் பிடிக்கும்.

*அறுவையாளர்:* உங்கள் திருமணம் காதல் திருமணமா இல்லை நிச்சயிக்கப்பட்ட திருமணமா.

*மணமகன்:* காதல்த் திருமணம்.

*அறுவையாளர்:* சரி மணமகன் உங்கள் பதில்கள் ஒரு வார்த்தையில் வருவதைப் பார்த்தால் வெட்கப்படுகிறீர்கள் போல் உள் ளது. சரி உங்களுக்கு என்னுடையதும் கலைய கத்தில் இருப்பவர்களுடையதும் நிகழ்ச்சியைக் கேட்டுக் கொண்டிருப்பவர்களதும் சார்பில் திருமண வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழிநுட்பச் சிக்கல் காரணமாக நீங்கள் கேட்ட பாடலை உடனடியாகத் தரமுடியாமல் இருப்பதற்கு மன்னிக்கவும். உங்களுக்காக நாங்கள் ஒரு பாடலைத் தருகிறோம். நீங்களும் உங்கள் காதலியும்கேட்டு மகிழ்வீர்கள் என்று நினைக்கிறேன்.

ஏன் பிறந்தாய் மகனே ஏன் பிறந்தாயோ பாடல் ஒலிபரப்பாகிறது.

பாடலைத் தொடர்ந்து 10 நிமிடங்களுக்கு விளம்பரங்கள் ஒளிபரப்பாகிறது.

அதனைத் தொடர்ந்து மீண்டும் அறிவிப் பாளர் அறுக்கிறார்

*அறுவையாளர் :*

சரி நேயர்களே இன்றைய நிகழ்ச்சியை நிறைவு செய்யும் நேரம் நெருங்கிவிட்டது நிகழ்ச்சியில் கலந்து சிறப்பித்த நேயர்களிற் கும் முயற்சித்த நேயர்களுக்கும் எமது நன்றி கள். தினமும் முயலுங்கள் ஒரு நாள் முயல்ப் பிடிப்பீர்கள்.. சே வெற்றி பெறுவீர்கள் உங்கள் அனைவரிடம் இருந்தும் வணக்கம் கூறி விடைபெறுவது உங்கள் அறுவையாளர்.......... நன்றி வண...

(சொல்லி முடிப்பதற்குள் விளம்பரங்கள் தொடர்கின்றன)

என்ன வாசகர்களே அறுவை தாங்க முடியலையா? ம் அதே தான் சொல்லவாறன்.

மனிசர் களைப்பில வந்து தொலைக்காட்சி, வானொலில ஏதாவது பாத்து மனசை அமைதிப் படுத்தலாம் எண்டு வந்தால். உதுதான் நடக் குது. என்ன நான் சொல்றது? ஒரே நிகழ்ச்சி பாடல் கேட்கிற நிகழ்ச்சி.

ஒரு ரீவியில நேயர் விருப்பம் என்று வந்தால் மற்ற வானொலியில நீங்கள் கேட்டவை.. இதே அறுவை தான். ஒரு மணி நேர நிகழ்ச்சி என்ற ால் அதில 20 நிமிட அறுவை 10 நிமிட பாடல். 30 நிமிட விளம்பரங்கள். இதனால் யாருக்கு என்ன பிரயோசனம்.

பாடல் கேட்க விரும்பிறவை இருக்கினம் இல்லை என்று சொல்லேல்ல ஆனால் அவை உதுகளையோ விரும்புகினம். அதிவேகமாக தொழில்நுட்பங்கள் வளர்ந்திட்டு இருக்கிற இந்தக்காலத்தில அதுவும் இந்த வளர்ச்சி யடைந்த நாடுகளில், உந்த திரைப்பாடல்களை வாங்க கேக்க நிறைய வசதிகள் இருக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். எங்கள் வானொ லிகளும், தொலைக்காட்சிகளும் தான் அவ ற்றை வழங்க வேண்டும் என்ற அவசியம் கிடையாது.

சரி நீங்கள் புறுபுறுக்கிறது கேட்கி றது. அப்ப அவையை நிலையங்களை இழுத்துச் சாத்திப்போட்டு போகச் சொல்றி யளோ எண்டு தானே கேக்கிறியள்.

அங்க தான் வாறன் கொஞ்சம் பொறுங்கோ.. எங்கட இளைய கலைஞர்கள் தங்கட திறமைகளை வெளிக்காட்ட எத்தனை யோ கஸ்டப்பட்டு தங்கள் படைப்புக்களை பொருட்செலவு செய்து வெளியிடுகிறார்கள்.

அவற்றை சந்தைப்படுத்தவோ அல்லது அவ ற்றை சரியான வழியில மக்களைச்சென்ற டையச் செய்யவோ இங்கு உள்ள எமது நிறுவனங்கள் தயாராக இல்லாத நிலையில். வாரத்தில் ஒரு நாள் வருகின்ற ஒரு நிகழ்ச்சியில் அறிமுகமாகிவிட்டு மறுபடி பெட்டிக்குள் போய் முடங்கி விடுகிறது அந்த படைப்புகள்.

இந்த நிலைமாறி எமது கலைஞர்களின் படைப்புக்களிற்கு மதிப்பளித்து அவர்களையும் பாராட்டி இப்படியான அறுவை நிகழ்ச்சிகளை விட.. அவற்றை போட்டால் சமகால எங்கள் பிரச்சனைகளை நாங்களே அறிந்துகொள்ள அது உதவியாக இருக்கும்.

அதைவிட்டிட்டு கட்டிப்புடி கட்டிப்புடிடா கண்ணாளா கண்டபடி கட்டிப்புடாவும்.. மச்சான் பேரு மதுர இதிலையும் எங்களுக்கு என்ன வந்து சேரப்போது சொல்லுங்கோ பாப்பம்..??

இது எங்கள் கோரிக்கை.. தயவு செய்து இப்படி பாதி நேரம் புலம்பி பாதிநேரம்.. இப்படி ஒன்றுக்கும் பிரியோசனமில்லாத பாடல்களை ஒளிபரப்பி தமிழ்மக்களின் நேரத்தை வீணாக் காமல் சந்தர்ப்பம் தேடி அலையும் எங்கள் கலைஞர்களின் உணர்வுகளிற்கு மதிப்பளித்து அவர்களது வளர்ச்சிக்கு பாராட்டுத் தெரிவிக்கிற மாதிரியாக நல்ல தரமான படைப்புக்களை மக்களைச்சென்றடையச் செய்யுங்கோ புண்ணியமாய்ப் போகும்.

ஒரு அறிவிப்பாளருக்கு அல்லது ஒரு தயாரிப்பாளருக்கு இந்த ஆக்கத்தைப் பார்க்கிற சந்தர்ப்பம் கிடைச்சால் கொஞ்சம் யோசிக்கிறீங்களா?

*- வாசகி & வாசகன்*




*Tropical fruits and vegetables, fresh and succulent.*

*West and East European Food Items.*

**Vikneesh Fresh Food**
Tel: 020 8554 9064
720 Eastern Avenue, Ilford, Essex. IG2 6PE

## இலவசம்! பொங்கல் பொதி!

**£50** மேல் பொருட்கள் கொள்வனவு செய்பவர்களுக்கு...

**வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது சித்திரை புத்தாண்டு வாழ்த்துக்கள்**

# விக்னேஸ்

சகல இலங்கை இந்திய உணவு வகைகள்

**நியாமான விலை!**

**கனிவான உபசரிப்பு!**

**தரமான பொருட்கள்!**

ஒரே இடத்தில் சகல பொருட்களும் மலிவாக பெற்றுக்கொள்ள இல்போரட்டில் பிரசித்தி பெற்ற கடைகளில் ஒன்று